# ***DEPOSITION OF WITNESS***

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## SC No. 232/2023

## PW: 8

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.பார்த்தசாரதி | Taluk : | திருவண்ணாமலை |
| Father's Name : | திரு.திருஞானம் | Calling : | LW14 |
| Village : | வெரையூர் | Age : | 43 |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 27th day of October 2025.

Signature of Witness.

(A1, A2, A3 Present. A4 absent. Petition filed and allowed. Additional Public Prosecutor absent. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் வெரையூர் கிராம எல்லைக்குள் வரும் வெரையூர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.09.2021-ம் தேதி அன்று பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கும்பகோணம் தேனாம்படுகையை சேர்ந்த ராஜ்குமார் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று காவல் நிலைய குற்ற எண்.546/2021 சட்டப்பிரிவு 294(B), 109, 307

இதச ன் படி 18.09.2021 அன்று 1.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

2) அன்றைய தினம் எனக்கு நிலைய பொறுப்பு அதிகாரி பணி ஒதுக்கப்பட்டிருந்தது. அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.3 ல் உட்பிரிவு b யில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் மற்றும் நேரம் என்ற இடத்தில் 18.09.2021 அன்று அதிகாலை 1.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை மணிக்கு நான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் 9.00 மணிக்கு சென்றேன். 17.09.2021 அன்று இரவு 1.00 மணி என்றால் சரிதான். 17.09.2021 அன்று நான் 1.00 மணிக்கு வாக்குமூலம் பெற்றேன். முதல் தகவல் அறிக்கை 18.09.2021 அன்று அதிகாலை 1.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.ஆ.4 ன் 15 வது காலத்தில் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்தை நான் தான் கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். வாக்குமூலத்தின் முதல் 2 வரிகள் ஒரு பேனா மையினாலும், மற்ற வரிகள் அனைத்தும் வேறொரு பேனா மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாக்குமூலத்தில் பாய் மளிகை கடை என்பதில் "மளிகை" என்ற வார்த்தை இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெயக்குமார் என்ற பெயர் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் 2 வது பக்கத்தில் மேலிருந்து நான்காவது வரியில் இரத்தம் அதிகமாகியிருந்ததில் என்ற

வார்த்தை இடைச்செறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஜெய்சிங் என்ற பெயர் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் நபரின் கையொப்பமோ ரேகையோ இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சசிக்குமார் மற்றும் ஜெய்சிங் என்பவர்களுடைய கையொப்பம் பெற்றுள்ளேன். இந்த இரு கையொப்பங்களும் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு வாங்கினேன் என்றால் சுமார் 1.10 மணிக்கு வாங்கினேன்.

3) என்னை காவல் ஆய்வாளர் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தாரா என்றால் விசாரணை செய்தார். என்னை சம்பவத்தின் நடந்த அன்றே 18.09.2021 ல் ஆய்வாளர் விசாரணை செய்தார். காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். ஆய்வாளர் என்னிடம் பெற்ற வாக்குமூலத்தை நான் பார்த்தேன். சசிக்குமார் மற்றும் ஜெய்சிங் என்பவர்களுடைய கையொப்பத்தை 18.09.2021 அதிகாலை 1.10 மணிக்கு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்ற விவரத்தை எனது விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என்னை ஆய்வாளர் திரு.கார்த்திகேயன் விசாரணை செய்தார். இந்த வழக்கில் 17.09.2021 அன்று வழக்கின் எதிரிகள் அஜீத், ஜெயக்குமார் மற்றும் அய்யப்பன் ஆகிய மூவரையும் இந்த வழக்கின் புகார்தாரர் அருவாளால் வெட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களில் அஜீத் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று குற்ற எண்.547/2021 ல் சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii) இதச

ஆகிய பிரிவுகளில் இவ்வழக்கின் புகார்தாரர் ராஜ்குமார் என்பவர் மீது பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் புகார் வாக்குமூலம் பெற்ற பிறகு வேறு வாக்குமூலம் எதுவும் என்னால் பெறப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் வேறு நபர்களால் பெறப்பட்டிருக்கலாம். புகார் வாக்குமூலத்தில் அடித்தல் திருத்தல் அதிகமாக இருப்பதற்கு என்ன காரணம் என்றால் மேனுவல் தவறுகையால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 2 புகார் வாக்குமூலம் எங்கள் காவல் நிலையத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் நான் சொல்லும் நாள், நேரம், இடத்தில் அ.சா.1 டமிருந்து பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கில் சம்பவ இடமாக 2 இடங்கள் குறிப்பிட்டு அ.சா.1 ராஜ்குமார் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். முதலில் நடந்ததாக சொல்லப்படும் 17.09.2021 அன்று இரவு 8.30 மணிக்கு உடையாளூர் மெயின்ரோட்டில் உள்ள பாய் மளிகை கடையில் ஒரு பிரச்சனை நடந்ததாக அ.சா.1 சொல்லியுள்ளார், ஆனால் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 வது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமானது இந்த வழக்கின் எதிரிகளின் வீடு என்றால் சரிதான். எதிரிகளின் வீடு இருப்பது வேறு தெரு, அ.சா.1 ராஜ்குமாரின் வீடு இருப்பது வேறு தெரு என்றால் சரிதான். எனது வாக்குமூலத்தில் அ.சா.1 ராஜ்குமார் தான் எதிரிகளின் வீட்டிற்கு தேடி சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 சம்பவம் நடந்ததாக சொல்லப்படும்

நேரம் இருட்டான நேரம் என்றால் சரிதான். வழக்கின் புகார்தாரர் ராஜ்குமார் மற்றும் அவரது சகோதரர் சசிக்குமார் ஆகிய இருவருமே பட்டீஸ்வரம் காவல் நிலையத்தில் சரித்திர பதிவேட்டில் உள்ள குற்றவாளிகள் என்றால் சரிதான். இருவரின் மீதும் எங்கள் காவல் நிலையத்தில் கொலை வழக்கு உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ராஜ்குமார் எதிரிகளின் வீட்டிற்கு அவர்களின் நண்பர்களுடன் ஆயுதங்களுடன் சென்றபோது அவர்களுக்குள் இருட்டு நேரத்தில் நடந்த பிரச்சனையில் அவர்களுக்கிடையே ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி இந்த எதிரிகளின் மீது பொய்யான வாக்குமூலம் கொடுத்ததின் அடிப்படையில் இந்த எதிரிகளுக்கு எதிராக நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த எதிரிகளை அ.சா.1 தாக்கியதிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் அவர் பொய்யான ஒரு புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் அ.சா.1 டமிருந்து 2 புகார் வாக்குமூலங்கள் பெறப்பட்டு ஒரு புகார் வாக்குமூலம் மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.